மேட்டுப்பாளையம் தென் திருப்பதி திருமலை ஸ்ரீவெங்கடேஸ்வர சுவாமி வாரி ஆலயத்தில் உரியடி உற்சவம்

மேட்டுப்பாளையம், ஆக. 29– மேட்டுப்பாளையம் தென் திருப்பதி திருமலை ஸ்ரீவெங்கடேஸ்வர சுவாமி வாரி ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு உரியடி உற்சவம் மற்றும் வழுக்கு மரம் ஏறும் சுவாரஸ்ய விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உள்ள தென் திருப்பதி என்றழைக்கப்படும் வெங்கடேஸ்வர சுவாமி வாரி ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா கடந்த மூன்று நாட்களாக வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தினசரி பல்வேறு சிறப்பு பூஜைகள், சுவாமி திருவீதி உலா என நடைபெற்று பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் குழந்தைகள் பங்கேற்ற நாடக நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தது.

இதில் ஒரு பகுதியாக கோயில் வளாகத்தில் உரியடி நிகழ்ச்சியும் வழுக்கு மரம் ஏறும் போட்டியும் நடைபெற்றது.

பிறர் மஞ்சள் நீரை ஊற்ற மேலே கட்டி தொங்க விடப்பட்ட உரியை அடிப்பது, எண்ணெய் ஊற்றி முழுவதும் நனைக்கப்பட்ட வழுக்கு மரத்தில் ஏறுவது என சுவாரஸ்யமான போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை கே.ஜி. குழுமத்தலைவர் பாலகிருஷ்ணன் வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அன்னூர் கே.கோவிந்தசாமி நாயுடு குடும்பத்தினர் கேஜி டெனிம் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

நீலகிரியில் பால்வினை நோய் குறித்து விழிப்புணர்வு பேரணி: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தொடங்கி வைத்தார்

நீலகிரி, ஆக. 29– நீலகிரி மாவட்டம், உதகை ரெயில் நிலையம் அருகிலிருந்து, உலக இளைஞர் தினத்தினை முன்னிட்டு, எச்ஐவி எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் குறித்து, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு எற்படுத்தும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இப்பேரணியானது உதகை ரெயில் நிலையத்தில் தொடங்கி, மார்க்கெட், மணிகூண்டு, ஏடிசி வழியாக சாந்திவிஜய் பள்ளிக்கு சென்று நிறைவு அடைந்தது. இப்பேரணியில், உதகை அரசு பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த 50 மாணவ, மாணவியர்களும், சாந்திவிஜய் பள்ளியை சேர்ந்த 60 மாணவியர்களும், செவிலியர் கல்லூரியை சேர்ந்த 60 மாணவியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட நபர்கள் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியப்படி பேரணியில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

எச்ஐவி எய்ட்ஸ் தொடர்பாக நீலகிரி மாவட்டத்திலுள்ள 35 கிராம பஞ்சாயத்தில் 10 கிராம பஞ்சாயத்தினை தேர்வு செய்து கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களிடையே கருத்தரங்கமும், ஆட்டோ ரிக்ஷா உரிமையாளர்களிடையே கருத்தரங்கமும், 10 நாட்கள் அபிநயா கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சிகளும் என பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி, பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என கலெக்டர் தெரிவித்தார். வித்தார்.

முன்னதாக, கலெக்டர், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுபாடு சங்கம் சார்பில் எச்ஐவி, பால்வினைநோய் குறித்து ஆலோசனை வழங்கி, பரிசோதனை செய்யகூடிய நடமாடும் வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தும், ஆட்டோக்களில் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அபிநயா கலைக்குழுவினரின் எய்ட்ஸ் பற்றிய விழிப்பணர்வு கலைநிகழ்சியினை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் கீதாஞ்சலி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்), மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் பாலுசாமி, இருப்பிட மருத்துவ அலுவலர் ரவிசங்கர், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலக திட்ட மேலாளர் அறிவழகன், மருத்துவர்கள், செவிலியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புத்தம் புதிய டிவிஎஸ் ஜூபிடர் 110 அறிமுகம்

கோவை, ஆக. 29– டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் தனது புத்தம் புதிய டிவிஎஸ் ஜூபிடர் 110ஐ கோவையில் அறிமுகப்படுத்தியது. அறிமுக விழாவில் டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் கம்முட்டர் மார்க்கெட்டிங் அசோசியேட் வைஸ் ப்ரெசிடெண்ட் பினாய் ஆண்டனி, டிவிஎஸ் மோட்டார்ஸ் தமிழ்நாடு ரீஜனல் சேல்ஸ் மேனேஜர் பத்மநாபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டிவிஎஸ் ஜூபிடர் 110 ஸ்கூட்டரில் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்திலான என்ஜின் மற்றும் இவ்வாகனப் பிரிவிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தப்படும் அம்சங்கள் மற்றும் பல சிறப்பம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

புத்தம் புதிய டிவிஎஸ் ஜூபிடர் 110அறிமுக விழாவில் பேசிய டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் கம்முட்டர் பிசினஸ் பிரிவின் மூத்த துணைத் தலைவர் மற்றும் கார்ப்பரேட் பிராண்ட் மீடியா பிரிவின் தலைமை நிர்வாகியுமான அனிருத்தா கூறுகையில், மறுவடிவமைக்கப்பட்ட ஒன்றாக மேம்படுத்தி புத்தம் புதிய டிவிஎஸ் ஜூபிடர் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது'' என்றார்.

டிவிஎஸ் ஜூபிடர் 110 ஸ்கூட்டரானது 113.3 சிசி, சிங்கிள் சிலிண்டர், 4 ஸ்ட்ரோக் எஞ்சின் மூலம் இயக்கப்படுகிறது. மேலும் இதன் தொழில்நுட்பமானது, இதற்கு முந்தைய மாடலுடன் ஒப்பிடும் போது 10% கூடுதல் மைலேஜ்ஜை அளிக்கிறது. புதுமையான ஐஜிஒ ஆசிஸ்ட் தொழில்நுட்பம் இதற்கு முக்கிய காரணமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஐஎஸ்ஜி எனப்படும் ஒருங்கிணைந்த ஸ்டார்டர் ஜெனரேட்டர் வசதியும் இதில் இடம்பெற்றுள்ளது.

முழுவதுமாக டிஜிட்டல் ப்ளூடூத் தொழில்நுட்பத்தினால், இயங்கும் குரல் அழைப்பு மற்றும் எஸ்எம்எஸ், செல்லுமிடங்களுக்கான பாதையை தெரிந்து கொள்ள உதவும் குரல் உதவியுடன் கூடிய நேவிகேஷன், வாகனம் எங்கிருக்கிறது என்பதை கண்டுபிடிக்க உதவும் பைன் மை வெஹிகிள் உள்ளிட்ட இன்னும் பல அம்சங்கள் இதில் இருக்கிறது.

டான் ப்ளூ மேட், கேலக்டிக் காப்பர் மேட், டைட்டானியம் கிரே மேட், ஸ்டார்லைட் ப்ளூ க்ளாஸ், லூனார் ஒயிட் க்ளாஸ் மற்றும் மீட்யோர் ரெட் என கண்களைக்கவரும் அட்டகாசமான வண்ணங்களின் கவர்ச்சிகரமான கலவைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

79,000 ரூபாய் (எக்ஸ்ஷோரூம், தமிழ்நாடு) விலையில் தொடங்கும் இந்த புதிய ஸ்கூட்டர் டிரம், டிரம் அலாய், டிரம் எஸ்எக்ஸ்சி மற்றும் டிஸ்க் எஸ்எக்ஸ்சி ஆகிய 4 வகைகளில் கிடைக்கிறது.

நாமக்கல் கலெக்டர் உமா திருச்செங்கோடு வட்டம், தவனாங்குறிச்சி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில் உட்பட பலர் உள்ளனர்.

திருப்பூரில் 30ந் தேதி எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம்

திருப்பூர், ஆக. 29– திருப்பூர் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்களுக்கான குறைதீர்க்கும் கூட்டமானது 30ந் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் (அறை எண்.120) நடைபெற உள்ளது. இக்குறைதீர்க்கும் கூட்டத்தில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிவாயு முகவர்கள் மற்றும் எண்ணை நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே, மேற்படி குறைதீர்க்கும் கூட்டத்தில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்கள் புகார்கள், குறைபாடுகள் இருப்பின் தங்களது எரிவாயு இணைப்பு புத்தகம் அல்லது அடையாள அட்டையுடன் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

சொந்த நூலகம் வைத்திருப்போர் விருது பெற விண்ணப்பிக்கலாம்: ஈரோடு கலெக்டர் அழைப்பு

ஈரோடு, ஆக. 29– ஈரோடு மாவட்டத்தில் சொந்த நூலகங்கள் வைத்திருப்போர் விருது பெற விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற பேரவையில் 2024–2025ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது 24.6.2024 அன்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு வீடுதோறும் நூலகங்கள் அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடு தோறும் நூலகங்கள் அமைத்துச் சிறப்பாகப் பயன்படுத்தி வரும் தீவிர வாசகர்களைக் கண்டறிந்து ஊக்குவிக்க ரூ.1.14 லட்சம் மதிப்பீட்டில் சொந்த நூலகங்களுக்கு விருது வழங்கப்படும். வீடு தோறும் நூலகங்கள் அமைத்துச் சிறப்பாகப் பயன்படுத்தி வரும் தனிநபருக்கு ஈரோடு மாவட்டத்தில் சொந்த நூலகங்களுக்கு விருது ரூ.3,000 மதிப்பில் கேடயம் மற்றும் சான்றிதழ் கலெக்டரால் வழங்கி கௌரவிக்கப்படும். பரிசு வழங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். இதற்கு தனி நபரோ அல்லது பிறர் வழியாகவோ எத்தனை நூல்கள் உள்ளது? எந்த வகையான நூல்கள்? அரிய நூல்கள் விவரம்? எத்தனை ஆண்டுகளாக பராமரிக்கப்படுகிறது? போன்ற விவரங்களை தங்களுடைய பெயர், முகவரி மற்றும் கைப்பேசி எண்ணுடன் 14.10.2024 (திங்கட்கிழமை) மாலைக்குள் அனுப்பி வைக்க வேண்டும் விவரங்கள் அனுப்பி வைக்க வாட்சப் எண் 75983 95352, இமெயில் erodedistrictlibraryoffice@gmail.com, மாவட்ட நூலக அலுவலர், மாவட்ட நூலக அலுவலகம், வீரப்பத்திர தெரு, ஈரோடு 638003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் 35வது வார்டுக்கு உட்பட்ட இடையர்பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தயாரிக்கப்படும் உணவுகள் சுகாதாரமான முறையில் தரமான உணவுகள் வழங்கப்படுகிறதா என்பதையும், உணவுப் பொருட்கள் இருப்புகள் மற்றும் பதிவேடுகளை மேயர் கா.ரங்கநாயகி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். உடன் உதவி ஆணையர் சந்தியா, மாமன்ற உறுப்பினர் சம்பத், மண்டல சுகாதார அலுவலர் வீரன், உதவி பொறியாளர் ராஜேஸ்வேணு கோபால், சுகாதார ஆய்வாளர் சந்திரசேகர் ஆகியோர் உள்ளனர்.

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
kotak Kotak Mahindra Bank
பதிவு அலுவலகம்: 27BKC, C- 27, G- பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு - 400 051. கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், எண்.1050, 2வது தளம், ஸ்ரீனிவாஸ் பவன், அவினாசி சாலை, கோயம்புத்தூர் 641 018
ஆன்லைன் இ-ஏல முறையில் சொத்து விற்பனை

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8 (5) மற்றும் விதி 9 (1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ-ஏல விற்பனை அறிவிப்பு. பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிஎஃபல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதாரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 19.12.2023 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "வங்கி/கோம்பிஎல்/ஈடுபெற்ற வழங்கியவர்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவாதீனம் எடுத்துக் கொண்டார்.
கடன் கணக்கு எண்.4P9BLSEX436052ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி **திரு. பி முஷ்டாக் அகமது, திருமதி. ஜாஹிதா முஷ்டாக் அகமது, திரு. சபீர் அகமத் பஷீர் அகமது & திருமதி. ரியானா** ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 27.08.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.36,03,914/-(ரூபாய் முப்பத்தாறு லட்சத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து பதினான்கு மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் **'எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்'** வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	03.10.2024
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	ரூ.26,00,000/- (ரூபாய் இருபத்தாறு லட்சம் மட்டும்)
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	ரூ.2,60,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	01.10.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி)

ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம் : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், பழைய நத்தம் ச.எண்.944/1 துணைப்பிரிவின்படி உ.எண். 944/43 ஹெக்டேர் 252. இதில் 2335½ சதுரடி நிலம், ஆர்சிசி பில்டிங், கதவு எண்.12/300, தாம்புரி மாவட்டம், தருமபுரி பதிவு மாவட்டம், பாலக்கோடு தாலுகா, பாலக்கோடு சார் பதிவு அலுவலகம், பாலக்கோடு கிராமம், 'D' அட்டவணை முஷ்டாக் அகமது சொத்து எல்லைகள்: கிழக்கு: ஹுசேன் சொத்து, மேற்கு: அகமது சொத்து, வடக்கு: சாலை, தெற்கு: அப்துல் காதர் சொத்து. கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 27 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 27 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம் 43¼ அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 43¼ அடி, விஸ்தீரணம் 1167¾ சதுர அடி 'ஜி' அட்டவணை சபீர் அகமது சொத்து எல்லைகள், தெற்கு : அப்துல் காதர் சொத்து, மேற்கு : சாலை, வடக்கு : சாலை, கிழக்கு : முஷ்டாக் அகமது சொத்து, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 27 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 27 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம் 43¼ அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 43¼ அடி, விஸ்தீரணம் 1167¾ சதுர அடி. மொத்தமாக 2335½ சதுர அடி நிலம்.

தெரிந்தவரை வில்லங்கள் : இல்லை

சர்பாசி சட்டம் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்படைத்தல் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. வேல்முருகன் கதிர்வேல்** (+91 9152219751), **திரு. விக்னேஷ் எஸ்** (+91 9092919036) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+91 9152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com ல் அளிக்கப்பட்டுள்ள லிங்க் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.
இடம் : தர்மபுரி, தேதி: 29.08.2024 **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்காக, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிட்.
Altum Credo Home Finance
பதிவு அலுவலகம்: சிடிஎஸ் எண்.1074/1, மனை எண்.426/1, கோகலே சாலை, மாடல் காலனி, சிவாஜிநகர், புனே 411016, மகாராஷ்டிரா.

இணைப்பு IV – சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையாசொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிட். (ACHFL) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (''சர்பாசி சட்டம், 2002''), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்பவும் (''அமலாக்க விதிகள்'') கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் (கூட்டாக **''கடன்தாரர்கள்''** என்று குறிப்பிடப்படுகின்றனர்) ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ளபடி தொகையை செலுத்துமாறு மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரிக்கப்பட்ட சொத்தை சர்பாசி சட்டம், 2002–ன் பிரிவு 13 உப பிரிவு 4ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியில் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், இந்த சொத்து ACHFLக்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர்/உடன் கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர் & கடன் கணக்கு எண்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி & தொகை (ரூபாயில்)	சுவாதீனத் தேதி
1	1) திரு மீனாமணிகண்டன் ஆர் என்ற திரு மீனாமணிகண்டன் ரத்தினசாமி (விண்ணப்பதாரர்) 2) திருமதி.வசந்தா ரத்தினசாமி (உடன் விண்ணப்பதாரர்) கடன் கணக்கு எண்: S127205000005	11.06.2024 31.05.2024 அன்று ரூ.9,08,698/– (ரூபாய் ஒன்பது லட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று தொன்னொற்று எட்டு மட்டும்) என்பிஏ : 31.05.2024	27.08.2024
	ஈடுபெற்ற சொத்துகளின் விவரம் (அசையா சொத்து): சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண் 43 பகுதி, ஒரு பகுதி, மொத்த விஸ்தீரணம் 1108 சதுர அடி, சர்வே எண் 277, டி.எஸ். எண். 7-5A, 7-5BP, பழைய வார்டு O, பழைய பிளாக் 11, புதிய டி.எஸ்.எண் 59/0, வார்டு 0, பிளாக் 81, திருப்பூர் கிராமம், திருப்பூர் மாநகராட்சி, பெரிச்சிபாளையம் தெற்கு, ஊர்கவுண்டர் நகர், திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை எண் II சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அதன் எல்லைகள் : கிழக்கு நோக்கி: சுப்பம் அட்டவணை நிலம்; மேற்கு நோக்கி: மனை எண். 43 பகுதி செல்வமுத்து, ரங்கசாமிக்கு சொந்தமானது; தெற்கு நோக்கி: காலனி நிலம்; வடக்கு நோக்கி: 10 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, விஸ்தீரணம் : கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 5.715 மீட்டர்; கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் 5.029 மீட்டர்; தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம்18.821 மீட்டர்; தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 19.507 மீட்டர்; மொத்தம் 102.93 சதுர மீட்டர் (1108 சதுர அடி)		
2	1) திரு.செந்திகுமார்முருகேசன் (விண்ணப்பதாரர்) 2) திருமதி தரணி எஸ் என்ற திருமதி தரணி அண்ணாமலை (உடன் விண்ணப்பதாரர்) கடன் கணக்கு எண். 1262040100049	11.06.2024 31.05.2024 அன்று ரூ.5,54,400/– (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து நானூறு மட்டும்) என்பிஏ : 31.05.2024	28.08.2024
	ஈடுபெற்ற சொத்துகளின் விவரம் (அசையா சொத்து): சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எடப்பாடி தாலுக்கா, எடப்பாடி தாலுக்கா, எடப்பாடி கிராமம், முள்பு எடப்பாடி டவுன் தெரு, தற்போதைய பவானி ரோடு தெருவில், நத்தம் சர்வே எண். 80/1, கதவு எண் 82Aல் உள்ள 320.5 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட வீட்டு மனை மற்றும் கட்டிடம். அதன் எல்லைகள் : தெற்கில் கிழக்கு மேற்காக நகராட்சி சந்து, வடக்கில் எம்.காளியப்பன் பங்கு வீடு; கிழக்கில் சின்னதுரை வீடு, கோபால் வகையறா வீடு; மேற்கில் கிருஷ்ணகவுண்டர் வகையறா வீடு. **1வது தக்கு** : விஸ்தீரணம் 208.5 சதுர அடி நிலம். மேற்கண்ட எல்லைகளைக் கொண்டுள்ளது. கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 13 அடி (7 அங்குலம்); கிழக்கு மேற்கு தெற்குப் பக்கம் 13 அடி (7 அங்குலம்); தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 15 அடி (4 அங்குலம்); தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம் 15 அடி (4 அங்குலம்); மொத்த விஸ்தீரணம் 208.5 சதுர அடி வீட்டு மனை மற்றும் கட்டிடம் மற்றும் அதில் உள்ள அனைத்து அறைகள், கதவுகள், பொருத்தப்பட்ட கதவுகள், பொருத்தப்பட்டுள்ள மின்சாதன பொருட்கள், உயில், மின்சார சேவை இணைப்பு, வழக்கமான பாதை, பொதுவான சாலை, பொதுவான உரிமை போன்றவை, TNEB SC No. 403, எடப்பாடி பஞ்சாயத்து. **2வது தக்கு** : விஸ்தீரணம் 112 சதுர அடி நிலம். மேற்கண்ட எல்லைகளைக் கொண்டுள்ளது. கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 11 அடி (6 அங்குலம்); கிழக்கு மேற்கு தெற்குப் பக்கம் 11 அடி (6 அங்குலம்); தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 8 அடி (11 அங்குலம்); தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம் 8 அடி (11 அங்குலம்); மொத்த விஸ்தீரணம் 112 சதுர அடி வீட்டு மனை மற்றும் கட்டிடம் மற்றும் அதில் உள்ள அனைத்து அறைகள், கதவுகள், பொருத்தப்பட்ட கதவுகள், பொருத்தப்பட்டுள்ள மின்சாதன பொருட்கள், உயில், மின்சார சேவை இணைப்பு, வழக்கமான பாதை, பொதுவான சாலை, பொதுவான உரிமை போன்ற உரிமைகளுடன் எடப்பாடி பஞ்சாயத்துக்கு உட்பட்டு உள்ளது. 1வது தக்கு 208.5 சதுர அடி, 2வது தக்கு 112 சதுர அடி. மொத்தம் = 320.5 சதுர அடி நிலம்.		

கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு சட்டப்பூர்வ அறிவிப்பு
பொது ஏலம் / டெண்டர்கள் மூலம் இனி எந்த நேரத்திலும் சொத்து விற்கப்படலாம் என்று கடன்தாரர்கள் /உடன் கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் இது ஒரு அறிவிப்பாகவும் கருதப்படலாம் பாதுகாப்பு (நல) அமலாக்க விதிகள், 2002ன் விதி 6, 8 & 9ன் கீழ் இது ஒரு அறிவிப்பாகவும் கருதப்படலாம்.

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி : 29.08.2024 **அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிட். (ACHFL)**
இடம் : திருப்பூர் மற்றும் ஈரோடு, தமிழ்நாடு

இன்டோஸ்டார் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
INDOSTAR
பதிவு அலுவலகம் : யூனிட் எண்.305,